

ஒன்றிய அரசு இந்தித் திணிப்பு, நிதிபகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பு என தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஆளும் பா.ஜ.க அரசைக்கண்டித்து கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நெய்வேலியில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் கண்டன உரை ஆற்றினார்.கழக இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ் குமார் சிறப்புரை ஆற்றினார்கள். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தலைமை வகித்தார்.தலைமைக் கழக பேச்சாளர் ஊடகவியாளர் மில்டன், கழக இளம் பேச்சாளர் மரியம் பீவி விளக்கவுரை ஆற்றினார்கள்.மாநில,மாவட்ட,நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், சதாம் மற்றும் நகர,ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பென்னிகுவிக் மண்டபத்தில் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் ஆர். ராஜேந்திரன் உறுதி!

சென்னை, மார்ச் 26–

தேனி மாவட்டம் லோயர் கேம்பில் லோயர் உள்ள பென்னிகுவிக் மண்டபத்தில் அருங்காட்சியகம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் பேசிய, கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் (திமுக) பேசுகையில், பென்னிகுவிக் வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் லோயர் கேம்பில் அமைந்துள்ள அவரது மணிமண்டபத்தில் அருங்காட்சியகம், சிறுவர் பூங்கா, உணவகம், தங்கும் விடுதி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதற்கு பதிலளித்து பேசிய சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், இங்கிலாந்து நாட்டிலிருந்து தன் சொத்துக்களை எல்லாம் விற்று முல்லைப் பெரியாறு அணையை கட்டிய பென்னிகுவிக்குக்கு அருங்காட்சியகம் அமைப்பது தொடர்பான உறுப்பினரின் கோரிக்கை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

---

## ஆனந்த் தலைமை! விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து தேவதானம் பேட்டையில் கண்டனப் பொதுக்கூட்டம்

## பொன் முத்துராமலிங்கம் – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – குடியரசு – அப்துல் மாலிக் சிறப்புரை!

செஞ்சி, மார்ச் 26–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணியின்செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் சார்பில் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில்பாராபட்சம் ,தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் செஞ்சி ஒன்றியம் தேவதானம் பேட்டையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி .கே. பி. ரமேஷ், உதயகுமார் ,எம்.டி. பாபு, அண்ணாமலை, விஜயகுமார்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மேல்மலையனூர் கிழக்கு நிர்மல் ராஜ், மேற்கு மணிகண்டன், மத்தியம் ரங்கநாதன், செஞ்சி மேற்கு சுரேஷ், ஆனந்தபுரம் தயாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சீனிவாசன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும்,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், முன்னாள் அமைச்சரும் தலைமை கழக பேச்சாளர் பொன் முத்துராமலிங்கம், தலைமைக் கழக இளம் பேச்சாளர் குடிஅரசு, மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் கலந்துகொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசு கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிர மணியன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், நகர மன்ற தலைவர் முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, உள்ளிட்ட திமுக நிர்வாகி கள் கலந்து கொண்டனர் செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி நன்றி கூறினார்.

---

# நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் 100 கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி!

## சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ.,துவக்கி வைத்தார்!

கடலூர், மார்ச் 26–

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணி திட்டத்தின் கீழ், கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி என்.எல்.சி. ஆர்ச் கேட் எதிரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் கலந்துகொண்டு, சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை தொடங்கிவைத்து, சீர் வரிசைப் பொருட்கள் வழங்கி பேசியதாவது:

முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில் சமுதாய வளைகாப்பு விழா தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, தற்போது நடைபெற்ற சமுதாய வளை காப்பு நிகழ்ச்சியில் நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 100 கர்ப்பி ணிகளுக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன.

கர்ப்பிணிப் பெண்கள் என்று தெரிந்தவுடன், உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து, அருகில் உள்ள அங்கன்வாடி மையத்திலும் பதிவு செய்து, மையத்தில் வழங்கப்படும் சத்துணவு மாவு பெற்று பயனடைய கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாதந்தோறும் முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவும், குழந்தை பிறந்தவுடன் குழந்தைகளுக்கு முறையான தடுப்பு ஊசி செலுத் திக் கொள்ள வேண்டும்.

மேலும், 3 வயது முதல் அருகில் உள்ள அங்கன்வாடி மையங்களில் சேர்த்து முன் பருவகல்வி பயில பெற்றோர்கள் தயார்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு சத்தான ஆரோக்கியமான உணவினை வழங்கி ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத நிலையை உருவாக்க அனைவரும் முயற்சி செய்வோம், என சபா ராஜேந்திரன் எம் எல்ஏ கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் அறிவொளி, முன்னாள் ஒன்றிய சேர்மன் சபா. பால முருகன், ஒன்றிய செயலாளர்கள் குணசேகரன், சந்தோஷ் குமார், அவைத்தலைவர் வீர. ராமச்சந்திரன், ஒன்றிய பொருளாளர் ஆனந்த ஜோதி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பவானி, மாவட்ட பிரதிநிதி வெங்கடேசன், ஆடலரசன், அரசு வழக்கறிஞர் அரிதாஸ், திமுக நிர்வாகிகள் ஜோதி லிங்கம் கோபால் சுப்பிர மணியன் சுப்பையா இளைஞர் அணி பைரவன் முருகன் பிரபு , ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய அமைப்பாளர்கள், உதவியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை

# தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.75 கோடியில் புதிய அணைக்கட்டு அறிவிப்பு!

## பொதுமக்கள், விவசாயிகள் வரவேற்பு!

ரிஷிவந்தியம், மார்ச் 26–

தமிழகத்தில் 560 கோடி ரூபாயில் 21 தடுப்பணைகள், 9 அணைக்கட்டுகள் கட்டப்படும் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சட்டசபையில் நேற்று முன் தினம் அறிவித்தார்.

அதன் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய அணைக் கட்டு அமைக்க அறிவிப்பு வெளியானது.

எல்லோருக்கும் எல்லாம் என மக்கள் பணியாற்றும், தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில்,

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும்தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர்களின் பரிந்துரையின் படி,

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சீரிய முயற்சியால், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே புதியதாக ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய அணைக்கட்டு அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிவித்தார்.

இந்த அறிவிப்பானது ரிஷிவந்தியம் தொகுதி மக்கள் மற்றும் விவசாயிகளின் 25 வருட கோரிக்கையாக இருந்து வந்தது, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை வைத்தும் நடவடிக்கை இல்லை, அது போல் கடந்த அதிமுக ஆட்சிக் காலத்திலும் இந்த கோரிக்கையானது நிறைவேற்ற வில்லை, நமது திராவிட மாடல் நல்லாட்சியில் இந்த கோரிக்கை நிறைவேறியது பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசதமாக அமைந்ததாக தெரிவித்தனர், தொடர்ந்து ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் கழகத்தினர் பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

---

## புதுக்கோட்டை வடக்கு – தெற்கு

# மாவட்ட பொறியாளர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எஸ். ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

புதுக்கோட்டை. மார்ச் 26

புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட பொறியாளர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.3.2025–புதன்கிழமை) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே கே செல்லபாண்டியன் ஆகியோர் தலைமையிலும், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஸ்வரன் சிறப்புரையிலும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ் வி ஆர் ஜெய ஸ்டாலின் ராஜா வரவேற்புரையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.ராமசாமி நன்றியுரையிலும் புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் .

---

## உச்சநீதிமன்ற - உயர்நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில்

# முதல்வர் ஆற்றிய உரை ஓர் வரலாற்றுப் பேருரையாகும்!

சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவினையொட்டி யும், இந்திய அரசியல் சட்டம் அமல்படுத்தப்பட்டு 75வது ஆண்டினைக் குறிக்கும் முறையில் வழக்கறிஞர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகளும், சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியும்/நீதிபதிகளும் கலந்து கொண்டனர். அந்த நிகழ்சியில் தமிழ்நாட்டினுடைய முதல்வரும், சட்டத்துறை அமைச்சரும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர், விழா மலரைவெளியிட்டு உரையாற்றிய முதல்வர் பொருள் பொதிந்த நகைச்சுவை உணர்வோடு தன்னுடைய உரையைத் தொவங்கியிருக்கிறார். “இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் இருவரில் ஒருவர் தமிழிலும், மற்றொருவர் ஆங்கிலத்திலும் உரையாற்றியுள்ளனர்”,

இதனை முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையின் துவக்கத்தில் குறிப்பிடும் பொழுது, “இங்கு உரையாற்றிய உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதிகளில் ஒருவர் ஆங்கிலத்திலும், மற்றொருவர் தமிழிலும் உரையாற்றினார்கள். ஆம்! எங்கள் தமிழக அரசின் மொழிக் கொள்கையும் இருமொழிக் கொள்கைதான் என்பதை பொருள் பொதிந்த நகைச்சுவையோடு குறிப்பிட்டது, அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் அமர்ந்துள்ள இந்த மன்றத்தில் எந்தக் கருத்தை எந்த முறையில் வெளிப்படுத்தி வலியுறுத்த வேண்டுமோ அந்தக் கருத்துக்களை நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருங்கிணைந்த நிர்வாகத்திற்கும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், சகோதரத்துவம் தொடர்வதற்குமான கருத்துக்களையும், வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் ஒருசேரக் கூடியிருக்கும் மன்றத்தில் அவர்களது சிந்தனைக்கு வைக்கப்பட வேண்டுமெனக் கருதி அந்தக் கருத்துக்களைத் தெளிந்த நீரோடைப்போல ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துவைத்து விளக்கியதோடு மட்டுமல்லாமல், அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கங்கள் குறித்து பாபாசாகிப் அம்பேத்காரினுடைய விளக்கங்களை மேற்கோள்க்காட்டி ஒரு தலைசிறந்த மூத்த வழக்கறிஞரைப் போல மாநில உரிமைகளுக்கான நியாயங்களையும், தேவைகளையும், இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற மாநில உரிமைகளுக்கான பாதுகாப்புகள் பற்றியும் உரையாற்றியிருக்கிறார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் அரசியல் சட்டத்தினுடைய நோக்கங்களையும், அதற்கான கட்டமைப்புகளையும் விளக்கியிருப்பதை உள்வாங்கிக் கொண்டு, அந்த அடிப்படை கட்டமைப்புகளை உருக்குழைக்கும் நடவடிக்கைகள் சமீபகாலமாக அந்தக் கட்டமைப்புகளுக்கு அச்சுறுத்தலாக உருவாகிக் கொண்டு வருகிறது என்பதையும், அத்தகைய அரசியல் சட்டத்தின் அடிப்படைகளை சீர்குழைக்கும் நடவடிக்கைகள் எதுவாக இருப்பினும், அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை கட்டமைப்புகளைக் காப்பாற்றி வருகின்ற பெரும் பொறுப்பு நீதித்துறைக்கு உண்டு என்பதைத் தன் உரையில் சுட்டிக் காட்டுகிறார். இந்திய அரசியல் அமைப்பில் கூட்டாட்சிமுறைதான் இந்தியாவின் ஒற்றுமையை நிரந்தரமாகக் கட்டிக்காக்க முடியுமென வலியுறுத்துகிறார்.

இந்திய அரசியல் சட்டத்தின் முதலாவது பிரிவில்(Article No:1), மாநிலங்களின் எல்லைகள் மற்றும் ஒன்றிய நேரடி நிர்வாகத்தில் உள்ள பகுதிகளின் எல்லைகளை உள்ளடக்கியதுதான் இந்திய ஒன்றியத்தின் எல்லைகளென வரையறுக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் இந்த பிரிவின் மூலம் மாநிலங்கள் ஒன்றிணைந்த கூட்டாட்சியைத்தான் இந்திய அரசியல் சட்டம் உருவாக்கியிருக்கிறது என்பதை தாராளமாக அனுமானிக்கலாம். இந்திய ஒன்றியத்தின் கூட்டாட்சித் தன்மைகள் (FFederalistic character) காயப்படுத்தப்படுமேயானால், இந்திய ஒன்றியத்தினுடைய ஒற்றுமை (NNNational integration) என்பது கேள்விக்குறியாக்கப் பட்டுவிடும். இந்திய ஒன்றியம் வரலாற்று ஆசிரியர்களால் துணைக் கண்டமென வரையறுக்கப்பட்டுள்ளது.

எனவே, இங்கு வாழும் பல்வேறு தேசிய இனங்களின் சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகள் பன்முகத்தன்மை கொண்டவையாகும். அதுமட்டுமல்ல, பல்வேறு மொழிகளைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்ட வேறுபட்ட மொழிக்குடும்பங்களாகும். எனவேதான், இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் தேசிய மொழிகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இயல்பாகவும், இயற்கையாகவும் அமைந்துள்ள பன்முகத்தன்மையைச் சீர்குழைக்கும் முயற்சியில், ஒன்றிய அரசு மதத்தின் பெயரால் ஈடுபட முயற்சிக்குமேயானால், நாட்டினுடைய ஒற்றுமை சிதறடிக்கப்படும் என்பதை தொலைநோக்கோடு எண்ணிப் பார்த்துதான் தமிழக முதல்வர் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுமியிருக்கின்ற வரலாற்றுப் பேரவை நிகழ்ச்சியில், மக்களை களத்தில் நேரடியாக எதிர்கொண்டு அவர்களின் உணர்வுகளையும், உந்துதல்களையும் ஆய்ந்தறிந்து, தான்கண்ட உண்மைகளை நாட்டின் ஒற்றுமை, ஜனநாயகம், சமூகநீதி, சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய கோட்பாடுகள் சமரசமின்றி தொடர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கருத்துக்களை உரிய நேரத்தில் தொடர்புடைய மாமன்றத்தில் அவர்களது சிந்தனைக்கு முன்வைத்துள்ளார்கள்! இன்றைய ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் உருவாக்கப்படும் சட்டங்களும், திட்டங்களும் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை கோட்பாடுகளான மதச்சார்பற்ற ஆட்சிமுறை ஜனநாயகம், குடியரசு, சமத்துவம், சமூக நீதி, சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய கோட்பாடுகளைச் சிதைக்கும் நோக்கில் உருவாக்கப்படுவதற்கு காரணம் “இந்துத்துவாக்” கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்து ராஷ்டிரத்தை” உருவாக்குகின்ற மறைமுத் திட்டம்தான் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரம் என்ற “அதிபர் ஆட்சி முறையை” அமல்படுத்த வேண்டுமென்பதும் அவர்களது நோக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவேதான், நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் ஒன்றுகூடிய அந்தப் பேரவையில் அதுவும், இந்திய அரசியல் சட்டத்திற்கு நிரந்தர பாதுகாப்பை வழங்கும் உரிமை பெற்ற அந்த மன்றத்தில் முதல்வர் அவர்கள் அரசியல் சட்டத்தினைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கில் தெரிவித்த கருத்துக்கள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டின் ஒற்றுமை கருதியும், மக்களின் நலன் கருதியும் உரிய அவையில், உரிய நேரத்தில் தெரிவித்ததாகத் தான் நாட்டின் மீது அக்கறை கொண்ட நடுநிலையாளர்கள் பாராட்டி, மகிழ்ந்து வாழ்த்துகிறார்கள்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



மேலும், ஒன்றிய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற முயற்சியின் தொடர்ச்சியாக முன்னாள் குடியரசு தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு வழங்கிய அறிக்கையின் மூலம் ஒரே காலகட்டத்தில் சட்டமன்றங்களின் தேர்தல்களையும், நாடாளுமன்றத் தேர்தல்களையும் நடத்தி முடிக்க தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், அந்தக் குழுவில் விளக்கமளித்த முன்னாள் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும், சட்டக் குழுத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற எ.பி. ஷா மிகத் தெளிவாக, நாடாளுமன்றக் குழுவிற்கு முன்னர், “ஒரே காலக்கட்டத்தில் சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றங்களுக்கும் தேர்தல் என்பது அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் முரண்பட்டது” என்று தன்னுடைய கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

ஆனால், ஒன்றிய அரசு எப்படியாவது ஒரே காலகட்டத்தில் தேர்தல்களை நடத்தி, தங்களின் முழக்கமான “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய முயற்சியின் தொடர்ச்சியாக, மதச்சார்பற்ற தன்மையைச் சீர்குழைக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்தியாவின் ஒற்றுமை என்பது வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்ற அடிப்படையிலும், இந்தியாவின் அனைத்து மக்களும் போராடி, ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற சூழ்நிலையில் உருவான உணர்வாலும், உணர்ச்சியாலும் உருவாக்கப்பட்ட நாட்டின் ஒற்றுமை (Emotional Integration) என்பதையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு புரிந்து கொள்ள மறுக்கிறது.

எனவே, இந்தச் சூழ்நிலையில் அதுவும், ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்திய ஒற்றுமைக்கு பெரும் தீங்கினைப் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் திருவள்ளுவர் காட்டிய குறள் வழி நின்று,

“அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்” (குறள் 497)

‘எனத் தன் செயலுக்குரிய வழி முறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை’ என்ற குறள் நெறி இலக்கணமெனில், தமிழ்நாடு முதல்வரின் அறிவு சார்ந்த அஞ்சாமை நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் இப்தார் விருந்து மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் ஜி.எம்.எஸ்.ஷபீக் தலைமையில் நாகர்கோவில், இளங்கடை பகுதியில் அமைந்துள்ள பாவா காசிம் வலியுல்லா திடலில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் த.முகம்மது ஹிதாயத் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர், மேயர் ரெ. மகேஷ் இப்தார் நோன்பு திறப்பு விருந்தில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். டேவிட்சன், வி.ஜோசப்ராஜ், ஆர்.சதாசிவன், பா.பாபு, கு.அகஸ்டினா கோகிலவாணி, இ.ஜவகர், சேக்மீரான், சா.பிரைட், கு.அந்தோணி அலங்காரம், எம்.எச்.நிசார், கோ.ஜெகதீஸ், மு.பாத்திமா ரிஸ்வானா, கான், வெற்றிவேல் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.